DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 64/2025

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சந்திரன் |
| Father / Husband Name | துரைசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கீழாமூர் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன்.

வழக்கில் இறந்து போன டில்லிராணி எனது அக்கா ஆவார். கடந்த 20.06.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு சென்னையில் மேல்மருவத்தூருக்கு ரயிலில் வந்து மேல்மருவத்தூரில் இருந்து கீழாமூருக்கு எனது சுந்தரம் அவரது மனைவியுடன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது கீழாமூர் நாகாத்தம்மன் கோவிலுக்கு அருகே சென்றபோது பேட்டரி கார் வேகமாக வந்து சுந்தரம் ஓட்டி சென்ற இருசக்கர வானத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் மேல்மருவத்தூர் மருத்துவமனை சென்று பார்த்தபோது என் அக்காவிற்கு தலை மற்றும் கையில் அடிப்பட்டு இறந்திருந்தார். நான் அவர் பிரேதத்தின் மீது நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள எனது கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 64/2025

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பிரகாஷ் |
| Father / Husband Name | வரதன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01**.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கீழாமூர் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன டில்லிராணி தெரியும். காயம் பட்ட சுந்தரம் எனது மாமா ஆவார். கடந்த 20.06.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு மேல்மருத்தூர் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து கீழாமூருக்கு சுந்தரம் அவரது மனைவியுடன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது நானும் சாட்சி ராமு என்பவரும் சுந்தரம் இருசக்கர வாகனத்தின் பின்னால் சென்று கொண்டிருந்தபோது கீழாமூர் நாகாத்தம்மன் கோவிலுக்கு அருகே சென்றபோது TN 07 DA 6039 என்ற எண் கொண்ட பேட்டரி கார் வேகமாக வந்து சுந்தரம் ஓட்டி சென்ற இருசக்கர வானத்தின் மீது மோதி சுந்தரம் மற்றும் அவரின் மனைவியும் நிலை தடுமாறி விழுந்தார்கள். டில்லிராணி தூக்கி வீசப்பட்டு சுந்தரத்திற்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட சுந்தரத்தையும் அவரது மனைவியையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் மேல்மருவத்தூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுபிவைத்தேன். டில்லிராணி இறந்துவிட்டார். ஆஜர் எதிரிதான் பேட்டரி காரை ஓட்டிவந்த நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. என்னையும் எனது நண்பர் ராமுவையும் மேல்மருவத்தூர் மருத்துமனையில் வைத்து சுமார் 5.00 மணிக்கு விசாரித்தார்கள். நானும் ராமுவும் என்பரும் ராமுவின் ஓண்டா ஆக்டிவா பைக்கில் சென்றோம் என்ற விவரத்தையும் அதன் பதிவெண்ணையும் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி வண்டியில் செல்லவில்லை என்பதால் தான் மேற்படி வாகனத்தின் அடியாளங்களை குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து கீழாமூர் நாகாத்தம்மன் கோவில் முன்பு நடைபெற்றது என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை சம்பவயிடத்தில் விட்டுவிட்டு 108 ஆம்புலன்சில் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் மேறப்டி விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலிசார்

விசாரணையில் பேட்டரி காரின் டிரைவர் அடையாளம் தெரியும் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். நானும் ராமுவும் சம்பவயிடத்தில் இருந்து நேரடியாக மேல்மருவத்தூர் மருத்துவமனைக்கு சென்றோம் என்றாலும. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் கீழாமூர் நாகாத்தம்மன் கோவில் அருகே நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. நானும் சாட்சி ராமுவும் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் போலிசார் சொல்லிக்கொடுத்துதான் எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல. சுந்தரத்தின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடைபெற்றது என்றாலும் ஆஜர் எதிரி வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 64/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

எதிரி ஆஜர்

| | |
|---|---|
| Name | ராமு |
| Father / Husband Name | துரைசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01.07.2025

முதல் விசாரணை:

1. நான் தற்போது கீழாமூர் கிராமத்தில் வசித்து டிரைவராக பணி புரிந்து வருகிறேன். வழக்கில் இறந்து போன டில்லிராணி எனது அண்ணி ஆவார். காயம் பட்ட சுந்தரம் எனது அண்ணன் ஆவார். கடந்த 20.06.2024 ம் தேதி மேல்மருத்தூர் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து கீழாமூருக்கு எனது அண்ணனும் எனது அண்ணியும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது நானும் சாட்சி பிரகாஷ் என்பவரும் என் அண்ணனின் இருசக்கர வாகனத்தின் பின்னால் சென்று கொண்டிருந்தபோது TN 07 DA 6039 என்ற எண் கொண்ட பேட்டரி கார் வேகமாக வந்து என் அண்ணனின் இருசக்கர வானத்தின் மீது மோதி எனது அண்ணி தூக்கி வீசப்பட்டு எனது அண்ணனுக்கும் அண்ணிக்கும் தலையில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எனது அண்ணனும் அண்ணியும் 108 ஆம்புலன்ஸ் மூலம் மேல்மருவத்தூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்கள். ஆஜர் எதிரிதான் பேட்டரி காரை ஓட்டிவந்த நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. என்னையும் சாட்சி பிரகாஷ் என்பவரையும் மேல்மருவத்தூர் மருத்துமனையில் வைத்து சுமார் 1.30 மணியளவில் விசாரித்தார்கள். நானும் பிரகாஷ் என்பரும் எப்போது மருத்துமனைக்கு சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. நானும் பிரகாஷ் என்பவரும் ஆம்புலன்சில் உடன் சென்றோம். விபத்தின்போது எனது அண்ணன் மற்றும் அண்ணியை தூக்கும் போது என் சட்டை முழுவதும் இரத்தகரை ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவத்தை நாங்கள் இருவரும் கீழாமூர் நாகாத்தம்மன் கோவிலுக்கு முன்பாக பார்த்தோம் என்றால் ஆமாம். நான் விபத்தை 10 மீ தூரத்தில் இருந்து பார்த்தேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் கீழாமூர் நாகாத்தம்மன் கோவில் அருகே நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தகவல் கிடைத்து நேரடியாக மருத்துவமனைக்கு சென்று என் அண்ணன் மற்றும் அண்ணியை பார்த்தேன் என்றாலும் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. நான் கண்ணுற்ற சாட்சி இல்லை என்றாலும் வழக்கிற்காக என்னை போலிசார் கண்ணுற்ற சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் பேட்டரி கார் ஓட்டியவரை எனக்கு அடையாளம் தெரியும் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் விபத்து நடைபெறவில்லை என்றாலும் என் அண்ணன் இழப்பீடு பெற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் சொல்லி கொடுத்ததின் பேரில் தான் எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல.

.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 64/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சுந்தரம் |
| Father / Husband Name | துரைசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01**.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கீழாமூர் கிராமத்தில் வசித்து கிராம உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 20.06.2024 ம் தேதி காலையில் சென்னையில் இருந்து மேல்மருத்தூருக்கு வந்து மேல்மருத்தூரில் இருந்து கீழாமூருக்கு எனது இருசக்கர வாகனத்தில் நானும் என் மனைவியும் கீழாமூர் கோவில் அருகே காலை 11.30 மணிக்கு செல்லும் போது பின்னால் வந்த மின்சார கார் அதிவேகமாக வந்து எனது இருசக்கர வாகனத்தின் ஹேன்பிரேக்கில் மோதியதில் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டேன். எனது மனைவி தூக்க விசப்பட்டார். 108 ஆம்புலன்ஸ் மூலம் மேல்மருவத்தூர் மருத்துவமனையில் நான் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன்.பின்னர் மேல் சிகிச்சைக்காக மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு 3 மாதங்கள் சிகிச்சை பெற்று வந்தேன். என் மனைவி இறந்தது விட்டார். நான் தூக்கி எரியப்பட்டதால் காரை ஓட்டிவந்த நபரை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. வழக்கு சம்மந்தமாக காவலர் என்னை மேல்மருவத்தூர் மருத்துவமனையில் சம்பவம் நடந்த 12.00 முதல் 1.00 மணிக்குள் விசாரித்தார்கள். இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் வேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்த போது என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை போலிசாரிடம் காட்டினேனா என்றால் காட்டினேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் விபத்து நடந்த போது எனது ஓட்டுநர் உரிமம் காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மனைவி இறந்ததற்காக இழப்பீடு பெறவேண்டு என் மகனை வைத்து பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி காரை அதிவேகமாக ஓட்டவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 64/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சுனில்குமார் |
| Father / Husband Name | சுந்தரம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01**.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னையில் வசித்து தனியார் கல்லூரியில் பட்டயபடிப்பு படித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன டில்லிராணி எனது அம்மா ஆவார். வழக்கில் காயம் பட்ட சுந்தரம் எனது அப்பா ஆவார். கடந்த 20.06.2024 ம் தேதி காலையில் எனது அப்பா அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் எனது அம்மாவை ஏற்றிக்கொண்டு செல்லும்போது 11.30 மணிக்கு கீழாமூர் நாகாத்தம்மன் கோவில் அருகே செல்லும் போது மின்சார கார் வேகமாக வந்து என் அப்பாவின் வண்டியின் மீது இடித்ததில் எனது அப்பாவும் அம்மாவும் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டதாக எனக்கு எனது சித்தப்பா தகவல் சொன்னார்கள். நான் எனது அம்மாவை மேல் மருவத்தூர் மருத்துவமனியல் சென்று பார்த்தபோது கை கால் மற்றும் தலையில் அடிப்பட்டு இறந்து இருந்தார். அப்பாவிற்கு தலை கண் புருவம் கை மற்றும் காலில் அடிப்பட்டு இருந்து. இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். எனது அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் எனது அப்பாவின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும் அதனை மறைத்து இழப்பீடு பெற வேண்டி பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 2 கையொப்பம் செய்தேன். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் 14 வது காலத்தில் எனது கையொப்பம் போட்டேன். போலிசார் என்னை சம்பவதினத்தன்றே மாலை 5.00 மணிக்கு என்னை விசாரித்தார்கள். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் பொய்யாக போட்ட பொய்

புகாரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் சொன்ன நேரத்தில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல.